**வ/ப மகாவலி கன்சல்ரன்சி பியூரோ (தனியார்) கம்பனி - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வ/ப மகாவலி கன்சல்ரன்சி பியூரோ (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுமு நியமங்களுக்கு உரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனியின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமத்தின் தொடர்புடனானஇணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்களின் அழிவு நட்டம் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அதற்காக அறிவு நட்டம் இனங்கானது மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 33,086,687 தொகையான பெறவேண்டிய மீதியினுள் உள்ளடங்கி இருந்த ரூபா 6,902,509 தொகை 05 வருடங்களை கடந்த மற்றும் 05 வருடங்களை விட குறைவான ரூபா 26,184,130 தொகை ஆகியவற்றுக்கு அழிவு நட்டம் ஒதுக்கப்படும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை அந்த மீதிகளுக்கான மீதி உறுதிப்படுத்தல்கள் அல்லது ஏனைய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு தற்போது உரிய நிறுவனங்களுடன் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் அறவிட முடியாத மீதிகளை திட்டவட்டமாக இனம் கண்டு எதிர்காலத்தில் கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஐயக்கடன் ஏற்படும் இயலுமையை மதிப்பீடு செய்து அழிவு நட்டத்திற்கு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 29 இன் 7 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கீட்டு கொள்கை இலக்கம் 3.3.2.4.1 இன் பிரகாரம் வரி செலவீனத்தை கணிப்பிடும் போது பிற்போடப்பட்ட வரி கருத்தில் கொள்ளப்படாது நியமத்தின் 29 இன் 2 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டிற்குரிய வருமான வரி செலவினம் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பிற்போடப்பட்ட வரி கருத்தில் கொள்ளப்பட்டு வருமான வரி கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | மொரகஹாகந்த சுற்றுலா விடுதியினை நிர்மாணிக்கும் போது பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டமையால் கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 20,200,000 தொகை ஒப்பந்ததாரிடம் இருந்து அளவிடப்பட வேண்டிய பணமாக 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுகளில் பெற வேண்டிய நடைமுறை சொத்தொன்றாக | இந்தத் பணத்தை அறவிடுவதற்கு சட்டமா அதிபரிடம் ஆலோசனை கோரப்பட்டுள்ளமையால், திட்டவட்டமாக இனங்கான முடியாத அடிப்படையில் ஐயக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படவில்லை<br><br>எதிர்காலத்தில் ஐயக்கடன் | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அழிவுநட்ட ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காண்பிக்கப்பட்டிருந்தது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான கணக்கிட்டு நியம இலக்கம் 11 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியில் இறுதியிலும் நிதிச்சொத்துக்களின் அழிவுநட்டம் இனங்ககாணப்பட்டு பெறுவனவுகள் நிச்சயமற்ற ரூபா 20,200,000 தொகையான மீதிக்காண அழிவும் நட்டம் இனங்காணப்பட்டு இருக்கவில்லை. | ஒதுக்கம் மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியம இலக்கம் 29 இன் 38 மற்றும் 39 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டுக்கான வருமான வரி கணிப்பீடு மற்றும் உரிய வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுகளில் குறிப்புகளாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் கம்பனி அதற்கிணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருமான வரி கணிப்பிடப்பட்டு உரிய வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பதிவு இலக்கம் 2.1 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுகின்றமை மற்றும் அதற்கமைய நியமத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த நியமம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் குறிப்பு இலக்கம் 3.3.1 இன் வருமானம் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 15 இன் பிரகாரமும், குறிப்பு இலக்கம் 3.2.2 இன் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கம் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 19 பிரகாரமும் குறிப்பு இலக்கம் 3.3 இன் நிதிக்கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிப்பது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | கம்பனியின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுவதுடன் ஒவ்வொரு திட்டவட்டமான சந்தர்ப்பத்திலும் பொதுவாக இனம்காணப்பட்ட நியமங்கள் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வருமானங்களை இணங்காமல் மற்றும் குறிப்பு வைத்தல் இலக்கம் 15 இன் பிரகாரமும் பணிக்கொடை ஒதுக்கங்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரமும் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கள் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஒத்த தன்மையுடன் தயாரிக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 3.3.2.1 இன் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்கள் அழிவு நட்டம், மெதுவாக நகரும் இருப்பு மற்றும் அதிகமாக வளர்ச்சியடைந்த நாற்று மேடைகள் ஆகியவற்றுக்கு நிதிக்கூற்றுகளில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 3.3.2.1 இல் கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் இருப்பு இல்லை என்பதும் அதனோடு ஒத்த எதிர்வரும் வருடத்தில் பதிவினை திருத்தி அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது உரிய பதிவுகளை மாத்திரம் உள்ளடக்க வேண்டும். |
| (இ) | உத்தேச கிங் நில்வலா செயற்திட்டத்தின் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையின் இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கான வருமானமாக ரூபா 9,713,554 தொகை இருதடவைகள் வருமான கணக்கிற்கு செலவு வைக்கப்பட்ட காரணத்தால் ஆண்டிக்குரிய இலாபம் அந்த அளவினால் மிகை கணிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தது. இதன் காரணமாக பெறவேண்டிய வருமானம் ரூபா 7,770,843 இனால் மிகை மதிப்பீட்டிற்கு உள்ளாகி இருந்தத்துடன் முன் பணி முற்பணம் ரூபா 1,942,710 அதிகரித்து அறவிடப்பட்டமையால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | உத்தேச கிங் நில்வலா செயற்திட்டத்தின் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையை தயாரிப்பதற்காக இறுதி அறிக்கை தயாரிக்கும் பொருட்டு 2023/01/05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச்சீட்டின் பெறுமதி ரூபா 9,713,554 ஆக காணப்பட்டதுடன் 2023/12/23 ஆம் திகதி பணம் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் பெறுமதி ரூபா 9,713,554 ஆகும். | கொடுக்கல் வாங்கல்கள் இருதடவைகள் பதிவு செய்யப்படாத வகையில் கணக்கிட்டு முறைமை திருத்தப்பட வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் நிதிக்கூற்றுகளில் இலங்கை மகாவலி அதிகாரசபையில் இருந்து அறவிடப்பட வேண்டிய மீதியாக ரூபா 1,319,471 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் நிதிக்கூற்றுகளில் கம்பனிக்கு செலுத்த வேண்டிய மீதிகள் எதுவும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வேறுபாடுகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மகாவலி அதிகார சபையில் இருந்து பெறவேண்டிய மீதிக்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்காக செலுத்த வேண்டிய மீதி அல்ல என எமக்கு அறிவிக்கப்படவில்லை. | உரிய மீதி உறுதிப்படுத்தல்களை பெற்றுக்கொண்டு வேறுபாடுகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | முற்பணங்கள் | 3,949,434 | உரிய தீர்ப்பனவு உறுதிச்சீட்டுகள் | அவதானிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு முற்பணங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய தீர்ப்பனவுகள் கம்பனிக்குச் சொந்தமாக கணக்காய்வு அவதானிபின் பொருட்டு காணப்படுகிறது. | கணக்காய்வு பரிசோதனையை செய்ய இயலுமான வகையில் அவற்றினை பராமரித்தல் பேணி செல்லல் மற்றும் உரிய காலத்தில் சமர்ப்பிக்க வேண்டும். |
| (ஆ) | பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 611,866 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | இது தொடர்பில் வருமான வரி திணைக்களத்துடன் கலந்துரையாடி பொருத்தமான தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | மீதி உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2009 பெப்ரவரி 20 ஆம் திகதிய 1589/30 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட செயல்வழி விதிமுறைகளின் IX அத்தியாயத்தின் 115 ஆம் பிரிவு. | ஏதேனும் பதவி ஒன்றில் பதிற் கடமைக்காக நியமிக்க முடியுமானது அந்த பதவிக்கு உரிய சேவைப்பிரமாணத்தில் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையில் அல்லது குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்துள்ள அந்தப் பதவிக்கு சமனான பதவியில் அல்லது அந்த பதவிக்கு அண்மைய அதற்கு அடுத்த பதவி ஒன்றில் அல்லது சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரே என்ற போதிலும் தகுதிகாண் காலப்பகுதியில் பதவி நிலை தரமற்ற MN-04 சம்பள அளவீட்டின் நிரந்தர பதவி ஒன்றில் உள்ள பெண் உத்தியோகத்தர் ஒருவர் சிரேஷ்ட பதவி நிலை உத்தியோகத்தர் தொகுதியின் HM 1-3 சம்பள அளவு திட்டத்தின் ஒன்றில் பதிக்கடமைக்காக | அவதானிப்புகளுடன் இணங்க முடியாது.<br><br>பதிற்கடமை பதவி ஒன்றுக்காக நியமிக்கப்படவில்லை. பகுதி அளவு சேவையை பெற்றுக் கொள்வதற்காக தொழில்சார் திறமைகள் கொண்ட உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தல் மாத்திரமே இடம்பெற்றுள்ளது. அவரை அவ்வாறு நியமிக்கும் போது கணக்காய்வினால் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள | செயல்வழி கோவை விதிமுறைகளின் பிரகாரம் செயல்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நியமிக்கப்பட்டு இருந்தார். இந்த பெண் உத்தியோகத்தர் மேற்படி பதவிக்கு உரிய சம்பளங்களை பெறுவதுடன் 2021 பெப்ரவரி முதல் 2023 திசெம்பர் வரையிலும் ரூபா 60,907 படியாக ரூபா 2,131,745 கூட்டுத் தொகையான பதிற்கடமை படியையும் பெற்றிருந்தார். | செயல்வழி விதிமுறைகள் பொருந்தாது என்பதுடன் அதற்காக கம்பனியின் பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் பொருத்தமாகும். | |
| (ஆ) | 2006 ஒக்தோபர் 11 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 02 அத்தியாயம் | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்க பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் குறியீடு உள்ளடங்களாக வழிகாட்டல்கள் எதிர்வரும் சில மாதங்களில் தயாரிக்கப்பட்டு அதற்கு இணங்க உரிய பெறுகைகள் மற்றும் தொழில்நுட்ப குழுவினை நியமிப்பதற்கு எதிர்பார்த்து உள்ளோம். | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரகாரம் பெறுகைகள் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு நியமிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றிக்கையினால் அறிமுகப்படுத்துள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களுக்கு உரிய கூட்டிணைந்த நிர்வாகத்திற்கான வழிகாட்டி கோவை | | | |
| (i) | 2.2.2 (அ) பிரிவு | பணிப்பாளர் சபையின் தலைவரால் ஆக குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவை பணிப்பாளர் சபை கூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் பணிப்பாளர் சபை கூட்டங்கள் 5 மாத்திரம் இடம் பெற்று இருந்தது. | எதிர்காலத்தில் நடாத்தப்படும் கூட்டத் தடவைகளை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | பொது முயற்சிகள் சொற்றறிக்கையின் பிரகாரம் பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 05 ஆம் பந்தி | குறுங்கால இலக்குகளை அடைந்து கொள்வதற்காக உரிய திட்டவட்டமான நடவடிக்கைகள் மற்றும் பணிகள் தொடர்பிலான விரிவான தகவல்கள் உள்ளடங்கிய செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று மற்றும் கம்பனியின் நீண்ட கால நோக்கு மற்றும் ஒட்டுமொத்த நோக்குநிலையை வரையறுக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பொழிப்பாக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அது கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் பொருளாதார இடர் நிலவிய காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டதுடன் விரிவான செயல் நடவடிக்கை திட்டம் ஒன்று மற்றும் நோக்குநிலை உள்ளடங்களாக எதிர்வரும் சில மாதங்களில் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கை மற்றும் கூட்டினைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | 4.2 ஆம் பிரிவு | கணக்காய்வு குழு ஒன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் சில மாதங்களினுள் நிறுவப்படும். | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு குழு நிறுவப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய 01/2021 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயல்வழி கையேடு | | | |
| (i) | 3.2 ஆம் பிரிவு | அனைத்து அரச முயற்சிகளினதும் பதவியணி ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் சம்பளம் செலுத்துதல் உள்ளடங்களாக பதவியணிக்கு உரிய அவர்களின் கோரிக்கைகளுக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரை உரித்தாகும் வகையில் பொது முயற்சிகள் பணிப்பாளர் (DGPED) அல்லது தேசிய வரவு செலவுத் திட்ட பணிப்பாளர் நாயகம் (DGNBD) மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் | அவதானிப்புகளை ஏற்றுக் கொள்கின்றேன்.<br><br>2025 மே மாதத்திற்கு முன்னர் உரிய அங்கீகாரங்களை பெற்றுக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்தவாறு உள்ளது. | அனைத்து பதவியணி ஆட்சேர்ப்புகளும் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்துள்ள செயல்வழி கையேட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | 6.6 ஆம் பிரிவு | நிதியாண்டு நிறைவடைந்து 05 வருடங்களினுள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | 6.7 ஆம் பிரிவு | கம்பனியின் நிலையான சொத்துக்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் ஆராய்ந்து பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தப்பட வேண்டும். |
| (iv) | 7.2 ஆம் பிரிவு | கம்பனியின் செயலாற்றல் மதிப்பீட்டின் பொருட்டு அடிப்படை செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் செயற்பாடு செயலாற்றல் குறிக்காட்டிகள் நிறுவப்பட்டு அதற்கு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | செயலாற்றல் மதிப்பீடு பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயல்வழி கையேட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (v) | 7.5 ஆம் பிரிவு | கம்பனியின் மாதாந்த, காலாண்டு ரீதியான மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் வரிசை அமைச்சருக்கு மற்றும் பொது திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செயல்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அனைத்து செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பிலும் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயல்வழிக் கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (vi) | 7.6 ஆம் பிரிவு | கம்பனியின் செயலாற்றலுக்கு உரிய தகவல்கள் வரிசை அமைச்சுக்கு மற்றும் திரைசேரிக்கு அறிக்கை இடுவதற்கு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செயல்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செயல்வழி கையேட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,064,123 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 6,430,564 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,633,559 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. சேவைக்கிரயம் ரூபா 2,399,096 ஆல் அதிகரித்தபோதிலும், மதியுரை சேவை வருமானம் ரூபா 7,453,185 ஆல் உயர்வடைந்தமை செயற்பாட்டு விளைவுகளின் இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை மகாவலி அதிகார சபை சட்டத்தின் 13(18) ஆம் பந்தியின் பிரகாரம் துணைக் கம்பனியாக நிறுவப்பட்ட வ/ப மகாவலி கன்சல்ரன்ஸி பியூரோ (தனியார்) கம்பனியில் காணப்பட்ட அனைத்து நிதி மற்றும் பௌதீகச் சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் பதவியணி மற்றும் ஒப்பந்த ஆலொசனை சேவைகள் மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து செயற்பாடுகளையும் விவசாய கிராமிய, பொருளாதார அலுவல்கள், நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சிற்கு கையளிப்பதற்கு 2019 ஒக்டோபர் 30 ஆம் திகதிய අමප/19/2770/104/083 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆதன் பிரகாரம் 2020 திசெம்பர் 30 ஆம் திகதி ரூபா 10 வீதம் 6385 பங்குகளுக்கான ரூபா 63,850 பங்கு மூலதனம் நீர்ப்பாசன அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், உரிமையை கையளிப்பது தொடர்பான தகவல்கள் நாளது வரையாக்கப்படாது கம்பனி இலங்கை மகாவலி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ள கம்பனியொன்றாக விரைவில் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கம்பனியின் நிதக்கூற்றுக்களில் கொள்கைகள் மற்றும் குறிப்பு இலக்கம் 3.2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | உரித்து மாறுபட்டமை தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் பதிவுகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனம் முக்கியமாக நீர்ப்பாசன அமைச்சினால் ஒதுக்கப்பட்ட பணிகள் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள திட்டங்களை மாத்திரம் செய்திருந்ததுடன், ஆலோசனைச் சேவைகளை வழங்கும் ஏனைய தனியார் நிறுவனங்களுடன் போட்டிபோட்டு விலைகளை வழங்கி தனியார் துறையில் ஆலோசனைப் பணிகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது குறித்து விசாரணை நடத்தி எதிர்காலத்தில் தெரிவிக்கப்படும். | போட்டித்தன்மையுடன் தனியார் துறை ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | வருமானம் ஈட்டும் அலகுகளுக்கு வருமானம் மற்றும் செலவினங்களை தனித்தனியாகக் கண்டறிந்து, இலாபம் மற்றும் நட்டம் சரிசெய்தல் தேவைப்பட்டாலும், நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் செயற்திட்ட பணிப்பாளராக கடமையாற்றும் உலக பாரம்பரிய நக்கிள்ஸ் நீர்நிலைகளின் கீழ் பள்ளத்தாக்குகள் திட்டத்தில பாதிக்கப்படக்கூடிய ஆற்றுப் படுகைகளில் வாழும் விவசாயிகள் மற்றும் விவசாய தோட்ட சமூகங்களின் காலநிலை மாற்றத்தைத் தாங்கும் திறனை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் திட்ட அமுலாக்க முகவர் நிறுவனமாக திட்ட ஆவணங்களால் (Project Documents) தீர்மானிக்கப்பட்டது மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளுக்காக செலவழித்ததில் ஒரு சதவீதத்தை வருமானமாக பெற்றது.<br>இது தொடர்பாக வருமானம் மற்றும் செலவுகளை அடையாளம் காண தனித்தனி கணக்குகள் வைக்கப்பட்டு இலாப நட்டம் சீராக்கம் செய்யப்படவில்லை. | இது குறித்து விசாரணை நடாத்தி எதிர்காலத்தில் தெரிவிக்கப்படும். | ஒவ்வொரு ஆலோசனைப் பணியிலும் தனித்தனி வருமானம் மற்றும் செலவுகள் அங்கீகரிக்கப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிங் நில்வளா திசை திருப்பல் செயல்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் அறிக்கை ஒன்றினை தயாரிப்பதற்காக 2017 ஏப்ரல் 28 ஆம் திகதி நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் கம்பனி ஆகியவற்றுக்கு இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையில் ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 22,138,000 ஆக இணக்கம் காணப்பட்டு அந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு உரிய பணிகள் 09 மாத கால பகுதியினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் உரிய திகதியில் பணி நிறைவு | கிங் நில்வளா செயல்திட்டத்தின் சூழல் கற்கைகள் அறிக்கையினை தயாரிப்பதற்காக எமது பணியகத்தினால் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் பல்வேறு சிக்கல்களுக்குரிய நிலைமைகள் மற்றும் அந்த செயல் திட்டத்தின் காரணமாக நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலைமை காரணமாக இந்த சேவையின் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் புதிய முகாமைத்துவத்தின் கீழ் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தற்போதைய சிக்கல் மற்றும் 2017 இல் இந்த EIA அறிக்கையை | உடன்படிக்கையின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதியுரை பணிகளை உரிய திகதியில் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிராத போது 2022 பெப்ரவரி 09 ஆம் திகதி ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 38,854,215 ஆக அதிகரிக்கப்பட்டு இருந்தது. கம்பனி 2022 திசெம்பர் 13 ஆம் திகதி வரைபு இறுதி அறிக்கையை இதற்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு சமர்ப்பித்திருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் அவதானிப்புகளை உள்ளடக்கிய அறிக்கை 2023 திசெம்பர் 27 ஆம் திகதி கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் மூலம் குறித்த வரைவு அறிக்கையின் பொதுவான குறைபாடுகளாக 07 குறைபாடுகளும் நிறைவேற்ற பொழிப்பின் கீழான 09 குறைபாடுகளும், அத்தியாயம் 07 இன் கீழான 95 குறைபாடுகளும் திருத்தப்பட்டு மீள சமர்ப்பிக்குமாறு குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2024 ஜூலை 22 ஆம் திகதி வரையிலும் அந்த குறைபாடுகளை திருத்தி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்காக இணைத்துக்கொள்ளப்பட்ட மதியரையாளர்களின் ஒரு தொகுதியினர் இராஜினாமா செய்தமையால் புதிய குழுவின் அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ள நேர்ந்தது. அதற்கான புதிய செலவின மதிப்பீட்டுக்கு அங்கீகாரம் கிடைத்தது. அதன் பின்னர் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை ஆகிய நகரங்களில் கோவிட் தொற்றுநோய் மற்றும் எரிபொருள் நெருக்கடி போன்ற சிரமங்களினால் திட்டமிட்டபடி மேற்கொள்ள முடியாத கள ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் அறிக்கை சேவை வழங்குனருக்கு வழங்கப்பட்டுள்ளது இந்த இறுதி அறிக்கையை தயாரிக்கும் போது தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் வழங்கப்பட்ட அனைத்து குறைபாடுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு அறிக்கையில் காணப்பட்ட அனைத்து தவறுகளும் திருத்தப்பட்டுள்ளது. | |
| (ஆ) | உலர் வலய விவசாயிகளுக்கான காலநிலை மதியுரை கட்டமைப்பொன்றினை உருவாக்குவதற்கு உதவுதல் மற்றும் டிஜிட்டல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதற்காக மதியுரை சேவை செயற்திட்டமொன்று ரூபா 75,859,875 தொகைக்கு வழங்குவதற்கு கம்பனி மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களை குறைக்கும் செயல்திட்டம் 2022 நவம்பர் 01 ஆம் திகதி ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த பணி 08 மாதங்களினுள் அதாவது 2023 ஜூன் அளவில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2024 ஜூலை 22 ஆம் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த மதியுரை பணிக்காக 2024 ஜனவரி 31 ஆம் திகதியின் பின்னர் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. விடய | இந்த மதியுரை சேவையின் மூன்றாவது அறிக்கை வழங்கப்பட்டுள்ளதுடன் இதற்குரிய டிஜிட்டல் கட்டமைப்பினை தயாரித்தல் தற்போது இறுதி கட்டத்தில் காணப்படுகிறது. இந்த டிஜிட்டல் கட்டமைப்பு இந்த தடவை மேற்கொள்ளப்பட உள்ள பெரும் போகத்திற்கான விவசாய மதியுரை அபிவிருத்தி மாவட்ட செயலமர்வின் ஊடாக விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளதுடன், அநுராதபுரம், திருகோணமலை, பொலன்னறுவை, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இதனை மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக உரிய தேதிகள் நீட்டிப்பு முறையாக பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் பொறுப்பேற்ற மதியுரை பணிகளை உரிய திகதிகளில் நிறைவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்ணய பத்திரத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய 5 பிரதான பணிகளில் 2 மாத்திரம் கணக்காய்வு திகதி அளவில் நிறைவேற்றப்பட்டிருந்தது. | | |
| (இ) | காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களை குறைக்கும் செயல்திட்டத்திற்கு உலகளாவிய தரவு கட்டமைப்பு மற்றும் நடைமுறை இயக்கங்களை தயாரிப்பதற்கு உரிய சேவை வழங்குனராக மதியுரை சேவை ஒன்றை வழங்குவதற்கு அந்த செயல் திட்டம் மற்றும் கம்பனி ஆகியவை 2023 ஜுன் 30 ஆம் திகதி உடன்படிக்கையை கைச்சாத்திட்டிருந்தன இந்த ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 3,742,460 ஆக காணப்பட்டதுடன், உடன்படிக்கையின் பிரகாரம் உரிய பணிகள் 04 மாத காலப்பகுதியினுள் நிறைவு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2024 ஜுலை 22 ஆம் திகதி வரையிலும் அந்தப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்த மதியுரை பணி கம்னெியினால் முழுமையாக உப ஒப்பந்தமாக வெளிவாரி நிறுவனம் ஒன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அவர்களால் வழங்கப்பட வேண்டிய நான்கு அறிக்கைகளில் கணக்காய்வு திகதியான 2024 ஜுலை 22 திகதி வரையிலும் ஒரு அறிக்கை மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் அதற்கமைய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தொகையில் ரூபா 748,492 மாத்திரம் கம்பனிக்கு கிடைத்திருந்தது. | இந்த மதியுரை சேவைக்கான அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்பட்டு சேவை பெறுநருக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய இறுதிக் கொடுப்பனவில் 25 சதவீதமான அளவு நீங்கலாக எஞ்சிய பணம் எங்களுக்கு கிடைத்துள்ளதுடன், இந்த ‘‘தரவு கட்டமைப்பு மற்றும் நடைமுறை ஈட்டங்கள்’’ பயன்படுத்துதலின் மூலம் சில பிரச்சினைகள் ஏற்பட்டால் தொழில்நுட்ப உதவினை பெற்று கொள்வதற்கு தேவை என்பதால் அதற்காக மேற்படி தொகை இறுதி பகிர்ந்தளிப்பினை வழங்கும் திகதியான 2024.04.25 இற்கு ஒரு வருடம் கடக்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் பொறுப்பேற்கப்பட்ட மதியுரை பணியை உரிய திகதியில் நிறைவு செய்ய வேண்டும். |
| (ஈ) | பதவியணியில் நிரந்தரமாக சேவையாற்றும் மதியுரையாளர்களை இணைத்துக் கொள்ளாது அமைச்சினால் கையளிக்கப்பட்ட மதியுரை செயல்திட்டம் மற்றும் ஒப்பந்தங்களை வெளிவாரி மதியுறையாளர்களுக்கு வழங்குவதன் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ள படியாக அமைச்சுக்கு மற்றும் செயற்கிட்டங்களுக்கு ரூபா 127,905,675 | இது தொடர்பில் ஆராய்ந்து எதிர்காலத்தில் அறிக்கையிடப்படும். | தனியார் நிறுவனங்களுடன் போட்டி விலை அடிப்படையில் மதியுரை ஒப்பந்தங்களை பெற்றுக் கொள்வதற்கு மற்றும் பொருத்தமான பதவியணி ஒன்றை இணைத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பெறுமதியான 05 ஒப்பந்தங்கள் கையளிக்க பட்டிருந்ததுடன், அந்த மதியுரை ஒப்பந்தங்களை நிறைவேற்றுவதற்காக கம்பனி 34 பெரிவாரி மதியரையாளர்கள் மற்றும் ஒரு தனியார் வெளிவாரி கம்பெனி ஆகியவற்றுடன் ரூபா 31,317,322 பெறுமதியான உடன்படிக்கை கைச்சாத்திட்டு இருந்தது. அதற்கமைய கம்பனி ரூபா 96,588,333 பெறமதியான அதாவது 300 சதவீதமான மொத்த இலாபத்தை ஈட்டி இருந்தது. இந்த 5 ஒப்பந்தங்கள் இடையே ரூபா 79,608,335 பெறுமதியான 2 ஒப்பந்தங்கள் கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது கம்பனியின் நிறைவேற்று உத்தியோகத்தர் பிரதி செயற்திட்ட பணிப்பாளராக சேவையாற்றும் வெளிநாட்டு உதவி செயல்திட்டங்களே என்பது அவதானிக்கப்பட்டது.

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனி 2017 ஆம் ஆண்டில் மொரகஹாகந்த சுற்றுலா விடுதி மற்றும் அதன் பார்வை கூடத்தினை நிர்மாணிப்பதற்காக உப ஒப்பந்தம் ஒன்றினை வழங்கி இருந்ததுடன், அதற்கு உரிய இடைக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டி கோவைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த காரணத்தால் கம்பனிக்கு ரூபா 20,200,000 தொகையான சட்டமன்ற ஏற்பட்டிருந்தது 2019 பிப்ரவரி 21ஆம் தேதி இடம்பெற்ற பொது முயற்சிகள் செயல்பாட்டு குழு கூட்டத்தில் இது தொடர்பில் முறையான விசாரணை ஒன்று நடத்தி ஒரு மாதத்தினுள் செயற்பாட்டு குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த பரிந்துரையை அமல்படுத்தி இராததுடன் கணக்காய்வோ திகதியான 2024 ஜூலை 22 ஆம் திகதி வரையிலும் குறித்த நட்டத்தை அளவிடுதல் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதற்கு உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன. | நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆக குறைந்து 2 மற்றும் ஆகக் கூடியது 7 எனும் கம்பனி பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம் தொடர்பில் திட்டவட்டமான ஏற்பாடுகள் அகவிதியின் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரால் இலங்கை பொறியியல் சேவையின் II ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் சிவில் பொறியியல் நீர்ப்பாசன அமைச்சின் பணிப்பாளர் (தொழில்நுட்ப கணக்காய்வாளர்) பதவிக்கு நியமிக்கப்பட்டு இருந்தார். அந்த உத்தியோகத்தர் கம்பனியின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராக அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி நீர்ப்பாசன அமைப்பின் செயலாளரால் நியமிக்கப்பட்டு இருந்தார். அந்த பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டிருந்த நியமன கடிதத்தின் பிரகாரம் உத்தியோகத்தரின் நியமனம் முழு நேர அடிப்படையிலா அல்லது பகுதியளவோ அடிப்படையிலா என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டிராததுடன், அவரது படிகளாக 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிரேஷ்ட முகாமைத்துவ பதவி ஒன்றுக்கு உரித்தான ரூபா 98,215 சம்பளம் மற்றும் 05 வருடங்களுக்கு உரிய ரூபா 13,500 ஆன சம்பள படியேற்றம் உள்ளடங்களாக சம்பளத்தின் ஒரு பகுதி மற்றும் ஏனைய படிகளும் உள்ளடங்கும் வகையில் ரூபா 52,342 படியாக திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. இந்த படிகளாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 697,890 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய இவருக்கு 2023 ஆம் ஆண்டுக்காக தமது பதவிக்கு உரியதாக ரூபா 926,976 சம்பளமாகவும், பிரதம நிறைவேற்ற உத்தியோகத்தர் பதவிக்காக ரூபா 697,890 படிகளாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்கவில்லை.<br><br>பதிற்கடமை பதவி ஒன்றுக்காக நியமிக்கப்படவில்லை. பகுதியளவு சேவையை வழங்குவதற்காக தொழில் சார் திறமை கொண்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்தல் மாத்திரம் இடம்பெற்றுள்ளது. அவ்வாறு நியமிக்கும் போது கணக்காய்வினால் சுட்டிக்காட்டுக்கப்பட்டுள்ள செயல்வழி நடைமுறைகள் மற்றும் விதிகள் பொருந்தாது என்பதுடன் மூலம் கம்பனியினால் பனிப்பாளர் சபையின் ஊடாக மேற்கொள்ளப்படும் நியமனங்களுக்கு உரித்து உடையது ஆகும் அரசின் தேவைபாட்டின் பிரகாரம் தாபனவிதி கோவையின 1.4 மற்றும் 1.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் தாபன விதிக் கோவையின் 09 அத்தியாயத்தின் 2.2 பிரகாரம் தனியார் அரச நிறுவனம் ஒன்றுக்கு சேவை வழங்கும் அடிப்படையில் இந்த சேவை கம்பெனியின் மூலம் ஏற்றுக்கொள்வதற்காக அரச உத்தியோகத்தர் ஒருவர் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். | அமைப்பு அகவிதியை திருத்தியமைப்பதற்காக உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கும், நியமனங்களுக்கு உரிய அனைத்து நிபந்தனைகளையும் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை மகாவலி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளராக (சட்டம்) கடமையாற்றிய அதிகாரி கம்பனி செயலாளர் / சட்ட அதிகாரி பதவிக்கு நியமிக்கப்பட்ட போதிலும், குறிப்பிட்ட அதிகாரி இலங்கை மகாவலி அதிகார சபையிலிருந்து விடுவிக்கப்படாததுடன் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் தன்மை, கொடுப்பனவு செலுத்தப்படும் முறை மற்றும் ஏனைய நியமன நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. 2016 ஏப்ரல் 25 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்படி பதவிக்கான ரூபா 55,925 ஆன சம்பளம் மற்றும் 05 வருடங்களுக்கான ரூபா 6,875 ஆன சம்பள அதிகரிப்பு போன்றவை உட்பட ஏனைய கொடுப்பனவுகளும் உள்ளடங்கலாக ரூபா 33,700 வீதம் கொடுப்பனவொன்று திறைசேரியின் அங்கீகாரம் இன்றி மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த படிகளாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 404,400 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், இந்த பெண் உத்தியோகத்தர் பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு பங்குபற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு செலுத்தப்படும் படிகளாக ரூபா 30,000 தொகையையும் பெற்றுக்கொண்டிருந்தார். | -மேற்படி- | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் கம்பனியின் செயல்திட்ட முகாமையாளர் பதவியில் கடமைகளை மேவுகை செய்வதற்காக இணைப்பு செய்யப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தர் 2019 ஆகஸ்ட் 01 ஆம் திகதி பயிலுநர் பட்டதாரியாக நீர்ப்பாசன அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஜனவரி 01 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். நியமனத் அதிகாரம் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தான போதிலும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் தமது விடயப்பரப்பிற்கு அப்பால் மேற்படி நியமனம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் இந்தப் பெண் உத்தியோகத்தர் அவரது நிரந்தர பதவியான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக சம்பளமாக ரூபா 572,160 தொகையும் கம்பனியின் செயல்திட்ட முகாமையாளர் | -மேற்படி- | நியமன உத்தியோகத்தரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளவும், ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் கொடுப்பனவு கட்டமைப்புக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளவும் வேண்டும். |

பதவிக்காக ரூபா 730,890 தொகையான படியும் 2023 ஆம் ஆண்டுக்காக பெற்றுக்கொண்டிருந்தார். கம்பனியின் படிகளை கணிப்பீடு செய்யும் போது HM 1.3-2016 சம்பளக் குறியீடு அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்ததுடன், அதற்கு வேறு படிகளாக ரூபா 2,300 தொகையும், ரூபா 1,500 வருகைப் படியாகவும், ரூபா 8,000 போக்குவரத்துப் படிகளாகவும் சேர்க்கப்பட்டிருந்தது.